# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.4/2023

## அ.சா. 3 (LW3)

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | கருப்பையா | **தொழில்** | |
| **தகப்பனார் பெயர்** | கருப்பு | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலூகா** | | **தேதி** | **12.06.2024** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1, 2 எதிரிகள் ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது வாடிப்பட்டி அருகில் சடையம்பட்டியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு நன்றாக தெரியும். இறந்து போன சென்ராயன் எனது மைத்துனர். 2ஆம் எதிரி எனது மைத்துனரின் மனைவி. 1ஆம் எதிரி எனது மைத்துனர் வீட்டின் அருகில் வசித்து வருகிறார். அவரும் எனது மைத்துனர் தான். 1 மற்றும் 2ஆம் எதிரிக்கும் இடையே கள்ள தொடர்பு இருந்ததாக எனது மாமனார் அடிக்கடி கூறி வந்தார். 1 மற்றும் 2ஆம் எதிரிக்கும் இடையே கள்ள தொடர்பு இருந்ததாக எனக்கு நேரடியாக தெரியும். 10.03.2021ஆம் தேதியன்று செவ்வனி மகள் தாரணி தொலைபேசி வாயிலாக அன்று காலை 5.30 மணியனவில் அண்ணன் சென்ராயன் இறந்துகிடப்பதாக தகவல் கொடுத்தார். அன்று காலை வாகனம் மூலம் வந்து பார்த்த போது சென்ராயன் இரத்த வெள்ளத்தில் இறந்து கிடத்தார். அப்போது நான் சென்ராயனை பார்த்த போது மூக்கிலும், பின் தலையிலும் காயம் ஏற்பட்டு இருந்தது. அதன் பின் நான் என்னுடைய செல்போனில் புகைப்படம் எடுத்தேன். நான் எடுத்த புகைப்படங்கள் தான் தற்போது என்னிடம் காட்டப்படும் 3 புகைப்படங்கள்.(அவற்றை குறியீடு செய்வதற்கு எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் புகைப்படம் எடுக்க பயன் படுத்திய செல்போன் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், அந்த புகைப்படகங்கள் பிரின்ட் செய்யப்பட்ட இடத்தில் இருந்து சான்றிதழ் பெறப்படவில்லை என்றும், அதனால் மேற்படி புகைப்படங்கள் குறியீடு செய்யப்பட முடியாது என்றும், ஆட்சேபனை தெரிவித்தார். அதற்கு அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சி செல்போனில் புகைப்படம் எடுத்தாக சொல்லியுள்ளதால் அவற்றை குறியீடு செய்து கொள்ளளாம் என்று பதில் தெரிவித்தார். மேற்படி புகைபடங்கள் எடுக்கப்பட்டதாக சொல்லும்

செல்போன் இவ்வழக்கில் போலீசாரால் கைப்பற்றி தாக்கல் செய்யப்படவில்லை. மேற்படி புகைப்படங்கள் போலீசாரிடம் ஒப்படைத்ததாகவும், அரசு தரப்பில் குறிப்பிடப்படவில்லை. எனவே மேற்படி புகைப்படங்கள் இந்த சாட்சி மூலமாக குறியீடு செய்யப்பட முடியாது என்று நீதிமன்றம் தீர்மானிக்கிறது) அதன் பின்னர் அந்த சம்பவம் பற்றி எனது மாமனார் நிலக்கோட்டை காவல் நிலையத்தில் புகார் அளித்தார். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.1 புகார் கொடுக்க சென்ற போது நான் உடன் செல்லவில்லை என்றால் சரிதான். இறந்து போன எனது மைத்துனர் இறப்பதற்கு 1 வருடம் முன்பு நான் அவரது வீட்டிற்கு செல்வதில்லை என்றால் சரிதான். என் மாமனார், மாமியாருடன் பேசிக் கொள்வேன். போலீசார் சம்பவதன்று என்னை விசாரித்தது தான், அதன் பின்பு என்னை விசாரிக்கவில்லை. தற்போது நான் சொன்ன விபரங்கள் அனைத்தையும் போலீசாரிடம் சொன்னேன். நான் சென்ற போது போலீசார் இல்லை, அதன் பின் போலீசார் காலை 7.30 மணியனவில் சம்பவம் இடத்திற்கு வந்தார்கள். போலீசார் அசா.1,2 மற்றும் வெள்ளைச்சாமி அனைவரையும் விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள் என்றால் சரிதான். நான் சென்ற போது வீட்டின் வெளியே சுமார் 50 முதல் 100 பேர் இருந்திருப்பார்கள். அதன் பின் போலீசார் கீழ் மற்றும் மேல் உள்ள மாடி வீட்டிலும் சோதனை செய்தனர். பொருள்களையும் கைப்பற்றினர். அங்கு கைப்பற்றிய பொருட்களை போலீசார் சாக்கு பையில் போட்டு சென்றார்கள். கைப்பற்றிய பொருட்களை எடுத்துச் சென்ற போது இறந்தவரின் அப்பா, அம்மா மற்றும் வெள்ளைச்சாமி உடன் இருத்தார்கள் என்றால் சரிதான். எனது மைத்துனர் கடன் வாங்கியிருந்த விபரம் எனக்கு தெரியாது. எனது மைத்துனருக்கு பல பெண்களுடன் தொடர்பு என்றால் சரியல்ல. இறந்த சென்ராயனுக்கு செல்வி மற்றும் கண்மணி ஆகியோருடன் கள்ள தொடர்பு இருந்ததாக சொல்கிறார்கள் என்றால் அது பற்றி நான் கேள்வி படவில்லை. இறந்த பிறகு சுமார் 2 மாதம் அ.சா.1ன் வீட்டில் தான் 2ஆம் எதிரி இருந்தார் என்றால் சரிதான். சொன்ன மாதிரி சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் சம்பவத்தை பார்க்கவில்லை என்றால் சரியல்ல. 1ஆம் 2ஆம் எதிரிக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றும், அ.சா.1 எதிரிகளுக்கு எதிராக மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. இறந்து போனவருக்கு கடன் மற்றும் கள்ளதொடர்பு பிரச்சனை இருந்தது என்றும் அது குறித்து எனக்கு தெரியும் என்றும் தற்போது அதை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இறந்த போனவர் 1ஆம் எதிரியிடம் ரூ.5 லட்சம் வரை கடன் வாங்கி இருந்தார் என்றும், அதன் பின்னிட்டு இறந்தவரின் அப்பாவிடம் (அ,சா.1) கடனை திருப்ப கேட்டு பிரச்சனை செய்ததால் அந்த பிரச்சனையில் இருந்து தப்பிப்பதற்காக இந்த வழக்கு பொய்யாக போடப்பட்டது என்றால் சரியல்ல. 2ஆம் எதிரியிடமும் அ.சா.1 பணம் கேட்டு பிரச்சனை செய்த விபரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. மேற்படி விபரங்கள் அனைத்தும் தெரிந்தும் அ.சா.1 தெரிந்தவர் என்பதால் நான் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால்

சரியல்ல. மேற்படி எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. முதல் எதிரி இறந்து போனவர் வீட்டின் அருகில் குடியிருக்கிறார் என்று சொல்வது பொய் என்றும், அவர் தனது தோட்டத்து வீட்டில் குடியிருக்கிறார் என்றும் சொல்வது சரியல்ல.

**2ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்.**

**மறுவிசாரணை – இல்லை**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

A K MEHBUB ALIKHAN

Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2024.06.12 17:01:23 +0530

Additional District Judge,

Dindigul.